## சிறப்பு நீதிமன்றம் எண். II, ஜெயங்கொண்டம்

## O.S. No. 114/2020

2021 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 14ம் நாள் வா.சா.1 வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54 வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு **R**. நல்லதம்பி கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

---

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | லோகநாதன் | வட்டம் | : | **உடையார்பாளையம்** |
| த.பெ. | : | வீராசாமி | சமயம் | : | இந்து |
| கிராமம் | : | ஜெயங்கொண்டம் | தொழில் | : | விவசாயம் |
| வயது | : | **51** | சாதி | : | **பறையர்** |

---

குறுக்கு விசாரணை 2ம் பிரதிவாதி தரப்பில்

என்னுடைய பூர்வீகம் ஜெயங்கொண்டம் ஆகும். 1ம் பிரதிவாதி என்னிடம் வரப்போக இருந்த வகையில் பழக்கமானவர். 2016, 2017 முதல் அவர் எனக்கு பழக்கம். வழக்கு சொத்தை விற்பனை செய்வதை எப்படி தெரிந்துகொண்டேன் என்றால் 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தை விற்பனை செய்வதாக என்னிடம் சொன்னார். அதன் மூலம் தெரிந்துகொண்டேன். வேறு யாரும் எனக்கு தகவல் சொல்லவில்லை. தாவா சொத்தை விற்பனை செய்வதாக 1ம் பிரதிவாதி எனக்கு தகவல் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. ஜெயங்கொண்டம் அண்ணா நகரில் வசிக்கும் இலக்கியதாசன் என்பவரை தெரியும். அவர் மூலமாகத்தான் தாவா சொத்தை விற்பனை செய்வதாக 1ம் பிரதிவாதி சொல்லியிருந்தார் என்றும், தாவா சொத்து விற்பனைக்கு உள்ள விபரம் இலக்கியதாசன் என்பவர் மூலமாகத்தான் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. 2ம் வாதி சிவகுமார் என்பவர் எனது மாமன் மகன். 1ம் பிரதிவாதி தற்போது உடையார்பாளையத்தில் வசித்து வருகிறார். அவர் உடையார்பாளையத்தில் வசிக்கவில்லை என்றும், திருப்பூரில் வசித்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 1 1/4 ஏக்கர் என்று சொன்னார்கள். அதில் நான் 43 சென்ட் கிரயம் வாங்கினேன். 1 சென்ட் விலை எவ்வளவு பேசப்பட்டது என்றால் மொத்தமாக 43 சென்ட்டுக்கும் ரூ.1,08,000/- விலை பேசப்பட்டது. சென்ட் கணக்கில் விலை பேசப்படவில்லை .

1ம் பிரதிவாதியின் அண்ணன் மகனிடமிருந்து இலக்கியதாசன் அவருடைய பாகத்தை ரூ.1,08,000/- க்கு விலைக்கு வாங்கியதாக சொல்லி பத்திரம் பட்டாவை என்னிடம் காட்டினார். அதன்பேரில் அதே தொகைக்கு நாங்களும் கிரயம் பேசினோம். ஜெயங்கொண்டம், காந்தி பார்க் அருகில் உள்ள என்னுடைய கடையில் வைத்து கிரயம் பேசினோம். அப்போது 1ம் பிரதிவாதியும், அவரது மகன் மறறும் 1ம் பிரதிவாதியின் அண்ணன் ஆகியோர் வந்தனர். 1ம் பிரதிவாதியின் அண்ணன் பெயர் ஞாபகமில்லை. கிரயமானது 2018ம் வருடம் ஜனவரி மாதம் 10, 12 தேதி வாக்கில் பேசப்பட்டது. ஜனவரி 21ம் தேதி கிரய ஆவணம் பதிவு செய்வதாக பேசப்பட்டது. கிரய ஆவணம் ஜெயங்கொண்டத்தில உள்ள ஆவண எழுத்தர் காமராஜ் என்பவர் அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது. ஆவணம் எழுதிய சமயத்தில் நானும், 2ம் வாதி, சிவகுமார், 1ம் பிரதிவாதி ராமசாமி, அவரது மகன் மற்றும் 1ம் பிரதிவாதியின் அண்ணன் ஆகியோர்கள் இருந்தார்கள்.

2ம் பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.